நாடகம் எழுதி நம்முடைய தமிழகச் செய்தித் துறையினரின் பரிசையும் பெற்றிருக்கிறார். அவர் சிறந்த நாவலாசிரியருமாவார். அவரை எனக்கு மிக நன்றாகத் தெரியும். வீடு கட்டுவதற்குக் கடன் கொடுக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கச் செயலாளரின் முறைகேடான செயல்களைப்பற்றித் தமது பத்திரிகையில் எழுதியது காரணமாக, இப்படிப் பகிரங்கமாகத் தாக்கியதாகச் சொல்லப் படுகிறது. இந்த வழக்கில் விரைவில் நடவடிக்கை எடுத்து திரு. வேலாயுதம் அவர்களுக்கு நீதி கிடைக்கும்படியாக அரசால் செய்ய இயலுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நீதிமன்ற விவகாரங்களில் அரசு தலையிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

Suicide near Rasipuram

* 290. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a family consisting of four members has committed suicide near Rasipuram, Salem, during May 1972; and

(*b*) if so, the reason for the suicide?

ராசிபுரம் அருகே தற்கொலை.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 மே திங்களில், சேலம், ராசிபுரம் அருகே நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் தற்கொலை செய்து கொண்டது உண்மையா?

(இ) ஆமெனில், அவ்வாறு தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பே இத்தற்கொலைக்குக் காரணமாகும்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: கேள்வி எண்கள் 296 முதல் 298 வரை ஒத்தி வைக்கப்படுகின்றன.